மாநகர சபை, மட்டக்களப்பு

2023ஆம் ஆண்டிற்கான சோலைவரி விதித்தல்

மட்டக்களப்பு மாநகரசபையில் 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2022.10.06 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள BMC/GM -55(65)/2022-15ஆம் இலக்கத் தீர்மானம் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.

2023ஆம் ஆண்டில் தங்களுக்கு விதிக்கப்பட்ட வரியினை முழுமையாகவோ அல்லது அட்டவணை – I இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீத வரியினை மட்டக்களப்பு மாநகர சபையின் நிதியத்திற்கு செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீத வரி 2022ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1ம் திகதி தொடக்கம் 2023ஆம் ஆண்டு தை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மாநகர சபைக்கு செலுத்தப்படுமாயின் வருடாந்த வீத வரித் தொகையில் பத்து வீத (10%) கழிவும், அட்டவணை - I இன் படி ஒவ்வொரு காலாண்டிற்கும் எதிரே 3ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித்தொகையை மட்டக்களப்பு மாநகரச்சபை நிதியத்திற்கு செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டிற்குரிய தொகையில் ஐந்து சதவீத (5%) கழிவும் வழங்கப்படுவதுடன், ஆதனவரி செலுத்தப்படாதவிடத்து வதிவிடங்களுக்கு 15% , வர்த்தக தாபனங்களுக்கு 20% உம் தண்டப் பணமாக அறவிடப்படும் எனத் தீர்மானிக்கப்படுகின்றது.

அட்டவணை - I

| காலாண்டு | செலுத்த வேண்டிய திகதி | 5% - கழிவிற்கு உரித்துப் பெறும் இறுதித்திகதி |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | பங்குனி 31 | - |
| இரண்டாவது காலாண்டு | ஆனி 30 | சித்திரை 30 |
| மூன்றாவது காலாண்டு | புரட்டாதி 30 | ஆடி 31 |
| நான்காவது காலாண்டு | மார்கழி 31 | ஐப்பசி 31 |

பிரேரணை

252ஆம் அத்தியாயமான மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 238ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் மாநகர சபைக்கு விதந்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு அமைய, மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகார பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல கட்டடங்கள், வீடுகள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புக்களின் 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுமதியினை 2023ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பெறுமதியாக ஏற்றுக்கொள்வதற்கும், குறித்த மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 230ஆம் பிரிவில் (1) உட்பிரிவினரால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்

பயனைக்கொண்டு குறித்த ஆதனங்கள் மீது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்தப் பெறுமதியில் அட்டவணை (II) இல் உள்ளவாறு 2023ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிட்டுக்கொள்வதற்கும், சோலை வரியை குறித்த மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 230ஆம் பிரிவின்(2) உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் குறித்த ஆண்டின் பங்குனி 31, ஆனி 30, புரட்டாதி 30 மற்றும் மார்கழி 31ஆம் திகதியுடன் பூர்த்தியடையும் 4 காலாண்டிற்குள்ளும் சமமான 4 தவணைப் பணத்தினை அட்டவணை - II இற்கு அமைய செலுத்துவதற்கும் கட்டளையிடுவதற்கும் மட்டக்களப்பு மாநகர சபை பிரேரிக்கின்றது.

**அட்டவணை II**

| வட்டாரங்கள் | வதிவிடங்கள் | வர்த்தக ஸ்தாபனங்கள் | வெற்று நிலம் | அரச ஆதனங்கள் |
|---|---|---|---|---|
| நகர்ப்பிரதேசங்கள் 8,9,10,11,17,18 | 7% | 8% | 25% | 15% |
| புற நகர்ப்பிரதேசங்கள் 4,5,6,7,13,14,15,16 | 6% | 7% | 20% | 15% |
| கிராமங்கள் 1,2,3,12,19,20 | 5% | 6% | 15% | 15% |

அரச ஆதனங்களுக்கு 15% வரி அறவிடப்படுவதுடன் குறித்த ஆதனங்களுக்கு எவ்வித தண்டப்பணமோ கழிப்பனவுகளோ மேற்கொள்ளப்பட மாட்டாது. தற்போது ஆதன வரியானது www.batticaloa.mc.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் செலுத்த முடியும்.

தி.சரவணபவன் (o/c)

கௌரவ மாநகர முதல்வர்,

2022.11.03

மாநகர சபை, மட்டக்களப்பு.

தி.சரவணபவன்
(J.P.U.M), M.Sc (Applied Statictic), B.Sc (Maths)
முதல்வர்
மாநகர சபை
மட்டக்களப்பு.